பெ. சரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்மங்கலம் - கரூர்.

# சிற்றிலக்கியம்

## சிற்றிலக்கிய குறிப்புகள்:

- சிற்றிலக்கிய வகைகள் 96
- பாடல் எண்ணிக்கை அடிகள் அளவில் சிறியதாக அமைந்துள்ளது
- அகப்பொருள் அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக இருக்க வேண்டும் கோவை=பல துறைகளை கொண்டு அமைகிறது
- பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்
- அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றை தருவதாக அமையும்
- இவ்வகையில் தூது உலா குறவஞ்சி பரணி பிள்ளைத் தமிழ் போன்ற பல வகையில் அடங்கும்
- சிற்றிலக்கியம் வடமொழியில் பிரபந்தங்கள் எனப்படுகின்றன
- சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையை
- 96 என்பது மரபு
- ஆனால் தற்போது 186 என்றும் அதிகபட்சமாக 417 என்றும் கூறப்படுகிறது

**அலகு - 1**

## குலோத்துங்கன் உலா

ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட நூல் மூவருலா. இதன் இரண்டாம் உலா குலோத்துங்க சோழன் உலா. முதல் உலா விக்கிரம சோழன் உலா இரண்டாம் உலா அவன் மகன்மீது பாடப்பட்ட குலோத்துங்க சோழன் உலா. இவன் இரண்டாம் குலோத்துங்கன் என வரலாற்றில் காணப்படுபவன். மூன்றாம் உலா இவன் மகன் இரண்டாம் இராசராசன் மீது பாடப்பட்ட இராசராசன் உலா.

இந்த நூல் உலா நூல் இலக்கண முறைப்படி அமைந்துள்ளது. 387 கண்ணிகளால் ஆனது. இவன் தில்லையில் செய்த திருப்பணிகள் 21 கண்ணிகளில் கூறப்படுகின்றன.

சோழமன்னர் எல்லாரும் கருநிற மேனி உடையவர்கள். இந்தக் குலோத்துங்கனின் மேனி நிறத்துக்கு ஏற்ப நீலநில ஆடை, நீல மணி முதலானவற்றைப் புனைந்துகொண்டு அவன் உலா வரும்போது வந்து நின்றாள் என்று இந்த நூலின் சில கண்ணிகளில் கூறப்பட்டுள்ளன.

இவன் தில்லைத் திருமுன்றில் இருந்த திருமால் சிலையைக் கடலில் எறிந்தான் என்பர்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

தில்லைத் திருமன்ற முன்றில் சிறுதெய்வத்

தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து

என இந்நூலில் வரும் கண்ணி இச் செய்தியைக் குறிப்பிடுகிறது.

இந்த நூலுக்குக் குலோத்துங்க சோழன் உலா உரை என்றும் பழைய உரை ஒன்று உண்டு. இந்தப் பழைய உரையின் பெருமையால் மூவருலாவில் இந்த உலா சிறப்பு மிக்கது என்பதை உணரமுடிகிறது.

**ஒட்டக்கூத்தர்**

ஒட்டக்கூத்தர் என்னும் புகழ்மிக்க தமிழ்ப் புலவர் விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழ மன்னர்களுக்கும் அவைப் புலவராகவும், அமைச்சராகவும் பணியாற்றியவர். இவருக்குப் பல பட்டங்கள் இருந்தன. அவற்றுள் கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சதன் என்பன குறிப்பிடத்தக்கன.

கவிச்சக்கரவத்தி

ஒட்டக்கூத்தர்தொழில் - கவிஞர்

நாடு - சோழர்

இயக்கம் - சைவ சமயம்

குறிப்பிடத்தக்க

படைப்பு(கள்) - தக்கயாகப்

**பிறப்பு:**

இவர் தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்திலே மலரி (இன்றைய திருவரம்பூரில்) என்னும் ஊரில் செங்குந்த கைக்கோளர் குலத்தில் பிறந்தார்.

கூத்தர்' முதலியார் என்பதுதான் இவரது பெயர் என்றாலும் இவர் 'ஒட்டம்' (பந்தயம்) வைத்துப் பாடுவதில் வல்லவர் என்பதால் ஒட்டக்கூத்தர் என்று வழங்கப்பட்டார்.

**வரலாறு:**

**ஒட்டக்கூத்தர் புகழேந்தி தனிப்பாடல்கள்**

நளவெண்பா இயற்றிய புகழேந்திப் புலவர் இவர் காலத்தில் வாழ்ந்தவர் கம்பரின் பிறந்த-நாளையும், மறைந்த நாளையும் நினைவுகூர்ந்து இவர் பாடியுள்ள இவரது பாடல்கள் கம்பர் இவரது

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

பெ. சரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்மங்கலம் - கரூர்.

காலத்துக்கு முந்தியவர் என்னும் வரலாற்று உண்மையை வெளிப்படுத்துகின்றன. காஞ்சிபுரத்தில் இருந்துகொண்டு அக்காலத்தில் ஆட்சி புரிந்துவந்த காங்கேயன் என்பவன் இவரைப் பேணிய வள்ளல். குலோத்துங்கன் போரைச் சிறப்பித்துப் பாடிய இவரது பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் உள்ளன. இவரும் புகழேந்திப் புலவரும் போட்டிப் போட்டுக்கொண்டு பாடல்கள் சுவை மிக்கவை.

இவர் இயற்றிய குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் என்ற சைவச்சிற்றிலக்கிய நூலே தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ் நூலாகும்.

இவரது காலத்துக்குச் சுமார் 500 ஆண்டுகள் பின்னர் பெரியாழ்வார் பாடிய பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் தனி நூலாக இல்லை.

பூந்தோட்டம் ஊரில் சரஸ்வதி கோயிலை ஒட்டக்கூத்தர் கட்டியதாகவும், அதனால் பூந்தோட்டம் அவரது பெயராலேயே கூத்தனூர் என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இவர் கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன், சக்கரவர்த்தி, காளக்கவி, கௌடப் புலவர், சருவஞ்ஞன கவி இன்ன பல பட்டங்களைப் பெற்றார் இதில் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் ஒட்டக்கூத்தர், கம்பர், சயங்கொண்டார் என மூன்று பேருக்கு மட்டுமே உள்ளது.

**உலா இலக்கியம்**

உலா என்னும் சிற்றிலக்கியம் பாட்டுடைத்தலைவன் உலா வரும்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவ மகளிர் காதல் கொண்டு மயங்கி நிற்பர். இது பரத்தையர் இயல்பு; குலமகளிர் இயல்பன்று. கலிவெண்பாவில் இதனைப் பாடுவர். ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப என்ற தொல்காப்பியச் சூத்திரமே இதற்கு அடிப்படை. இந்த அடிப்படை, முதலில் காப்பியங்களில் ஒரு கூறாகி, பின்னாளில் தனி இலக்கியமாகவே உருவெடுத்தது. பாட்டுடைத் தலைவன் பவனியே பெரிதும் சிறப்பிக்கப்படுவதால் உலா என்று பெயர் பெற்றது.

**உலா இலக்கிய வரலாறு**

**ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப**

**வழக்கொடு சிவணிய வகைமை யான**

எனும் தொல்காப்பிய நூற்பா உலாவின் தோற்ற நிலை என்பர். பெருங்காப்பியங்களில் பாட்டுடைத்தலைவன் உலா வருதல் சுருக்கமாகக் கூறப்படும். இதனை மட்டுமே உயிர்நாடியாகக் கொண்டு தெய்வமே உலா வருவதாகவும், அவ்வுலாக் கண்டு உவகை கொண்ட பல திறப் பெண்கள்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

காமுற்றதாகவும் கலிவெண்பாவில் பாடப்படுவது உலா இலக்கியம். இதனை உலாப்புறம் என்றும் கூறுவர்.

ஆதி உலா, தெய்வீக உலா எனச் சிறப்பிக்கப்பெறும் சேரமான் பெருமாள் நாயனார் செய்த திருக்கைலாய ஞான உலாவே முதல் உலாவாகும். இறைவன் பெருமை பேசும் உலா என்ற முறையில் தெய்வீக உலா எனச் சிறப்பிக்கப்படுகிறது. சிறந்த ஓசை நயமும் கருத்தாழமும் கொண்ட இவ்வுலா பன்னிரு திருமுறைகளில் பதினொராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இதன் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு. சிவபெருமானின் பெருமையும் இறைவியின் அழகும் வீதிகளின் சிறப்பும் அழகிய வர்ணனைகளோடு அமைந்து கற்போரை மகிழ்விக்கிறது.

**பாகுபாடுகள்**

பாட்டுடைத் தலைவன், ஏழு பருவப் பெண்கள் காமுறுதல், ஏழுநாள் உலா என்றெல்லாம் உலாநூல்களின் போக்கில் மாறுதல்கள் காணப்படுகின்றன.

இறைவன் உலா வருதலைக் கண்டு காதல் கொள்வது அருள்-காதல். இதனை ஞானக்காதல் என்றும் கூறுவர். இறைவனின் அடியவர் உலா வரக் கண்டு காமுறுதலும் இந்த வகை. அரசன் உலாவரக் கண்டு கற்புடைய மகளிர் காதல் கொண்டனர் எனப் பாடுவது தமிழ் மரபுக்கு ஒவ்வாதது. இவ்வாறு பாடப்பட்ட உலாவில் காதல் கொண்டவர் பொதுமகளிர் என உரையாசிரியர்கள் அமைதி கண்டனர்.

உலா வரும் ஒரே நாளில் ஏழு பருவ மகளிர் கண்டு காமுற்றனர் எனப் பாடுவது பொது மரபு. மதுரை சொக்கநாதர் உலா இந்த மரபில் மாறுபடுகிறது. மதுரை சொக்கநாதன் ஏழு நாள் உலா வந்தான். முறையே தேர், வெள்ளை-யானை, வேதக்குதிரை, இடப-வாகனம், தரும-ரிஷபம், கற்பக-விருட்சம், சித்திர-விமானம் ஆகியவற்றின்மீது ஏறி ஏழு நாளும் உலா வந்தான் - என்று இந்த நூல் பாடுகிறது.

ஆதியுலா ஒரு தலத்தில் வந்த உலாவைப் பாடவில்லை. பல தலங்களின் மேலது.

✓ தேரின் சிறப்பு

✓ ராமனின் சிறப்பு

✓காவேரி சூழலின் சிறப்பு

✓சோழன் செங்கணான் சிறப்பு

✓சோழ மன்னனின் சிறப்பு

✓விக்ரம சோழனின் மகன் தன்மை



அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓அரசு உரிமை பெறல்

✓புவனி முழு துறையால் என்ற மங்கையின் சிறப்பு

✓சிவபெருமானின் சிறப்பு

✓ ரத்தினத்தின் சிறப்பு

✓ தாமரை பீடத்தின் சிறப்பு

✓செல்வம் நிறைந்து இருக்கும் தன்மை

✓மன்னன் தூக்கம் நீங்கி எழுதல்

✓இயற்கையின் சிறப்பு

✓கற்றவர்களின் வாழ்த்து

✓ஆயுதப் படையின் சிறப்பு

✓குதிரையின் சிறப்பு

✓தெருவின் தன்மை

✓தெருக்களில் கூடியிருந்த

✓மக்களின் சிறப்பு படை

✓கூட்டத்தின் தன்மை

✓பேதைப் பருவத்தின் சிறப்பு

✓பெதும்பை பருவத்தின் சிறப்பு

- கடல்கள் ஏழு
- ஏழு நதிகள் ஏழு
- மலைகள் ஏழு
- மேகங்கள் ஏழு
- கோல்டு ஏழு

✓மத யானையின் வருகை

✓மனம் வருவதன் காரணம்

✓மங்கைப் பருவத்தில் சிறப்பு

✓மன உறுதி கொண்ட

✓பெண்ணின் சிறப்பு

✓திருமகள் போல தோன்றுவதன் காரணம்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓அன்னம் மயில் மான் இவைகளோடு இருத்தலின் சிறப்பு

✓ குலோத்துங்கனின் சிறப்பு

✓தலைவி வீடு செல்லுதல் இன் சிறப்பு

✓மாணிக்கக் கற்களின் சிறப்பு

✓முரசு ஒளியின் சிறப்பு

✓பாண்டியன் சேரன் சோழன்

✓நேர் நிற்றலின் சிறப்பு

✓வெண்கொற்றக் குடையின் சிறப்பு

## அலகு- 2

## குற்றால குறவஞ்சி

**குறிப்பு அறிமுகம் :**

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றித் தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்

**நூலாசிரியர்**

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தென்காசி மாவட்ட அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர் (இவர் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர் ஆவார் - இவரைத் தலைவராகக் கொண்டு நெஞ்சுவிடு தூது என்ற இலக்கிய படைப்பையும் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது). திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

**கதை அமைப்பு**

குறவஞ்சி நாடகத்திற்கென வரையறை செய்யப்பட்ட கதை அமைப்போடே இந்நூலும் விளங்குகிறது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே கட்டியங்காரன் கூறுகிறான்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

திருவுலா தொடங்குகிறது மூவர் தமிழும் நான்மறைகள் முழங்கக் குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார். குற்றாலநாதாரின் திருவுலாவைக் காணப் பெண்கள் எழுந்து வருகின்றனர். அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (கதைத்தலைவி) என்பவளும் திருவுலாக்காண வருகிறாள்.

தோழியின் வாயிலாக இறைவனைப் பற்றி அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள். இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள். தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலைவளமும் தொழில்வளமும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறாள். பின் வசந்தவல்லி கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் காதல் கொண்டுள்ள செய்தியையும், (தலைவனின்) குற்றாலநாதரின் புகழ்பற்றியும் எடுத்துச்சொல்லி வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்று குறி சொல்லிப் பரிசு பெறுகிறாள் குறத்தி தலைவி.

அவள் கணவன் தலைவன் அவளைக் காணத் தேடிவருகிறான். குறத்தியைக் கண்ட தலைவன் குறத்தி நடந்ததைச் சொல்ல இருவரும் குற்றாலநாதரைப் பாடி இன்பம் அடைகின்றனர். இவ்வாறு கதை முடிகிறது.

**நூலின் சிறப்புகள்:**

குறவஞ்சி நூல்களுள் பாராட்டுக்குரியதாக விளங்கி வருவதால் திரிகூடராசப்பக் கவிராயரின் இந்நூல் 'கவிதைக் கிரீடம்' என்று அழைக்கப்படுகிறது இன்றும் நாட்டிய நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு வருவதும், இக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமகஅந்தாதி முதலிய நூல்களை இயற்றியிருந்தாலும் இன்று பலரும் விரும்பிப் படிப்பது அவருடைய குறவஞ்சி ஒன்றே.
குற்றாலக்குறவஞ்சியானது இறைவன்மீது பாடப்பெற்றதால் திருக்குற்றலாக்குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் சந்த (ஓசை) நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்றுள்ளது. சான்றாக வசந்தவல்லி பந்தாடும் பாங்கைப்பற்றி எடுத்துரைக்கும்,

**செங்கையில் வண்டு கலின்கலின் என்று**

**செயம் செயம் என்றாட இடை**

**சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு**

**தண்டை கலந்தாடஇரு**

**கொங்கை கொடும்பகைவென்றனம் என்று**

**குழைந்து குழைந்தாடமலர்ப்**

**பைங்கொடி நங்கை வசந்த**

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**சவுந்தார் பந்து பயின்றனளே**

என்ற பாடலைக் கூறலாம். இதைப்போல் சந்தநயம் கொண்ட இன்னும் பலபாடல்கள் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்டுள்ளன.

குற்றாலக் குறவஞ்சியில் தமிழகத்தின் காட்டு விலங்குகளைப் பற்றியும் செடியினங்களைப் பற்றியும் மிகப்பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

கொல்லம் ஆண்டு 887 ல் பாண்டிய அரசன் குற்றாலநாதரின் சித்திரசபைக்கு ஓடு வேய்ந்த செய்தியைச் சின்னணஞ் சாத்தேவன் என்பவன் செப்பேடு செய்து செய்திருக்கிறான், என்று இந்த நூலிலுள்ள பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

கொல்லம் 824 + 887 = 1711-ஆம் ஆண்டினை இந்த நூல் குறிப்பிடுவதால் இந்த நூலின் காலம் 18-ஆம் நூற்றாண்டு எனத் தெரியவருகிறது.

**குற்றால குறவஞ்சி பொருளடக்கம்:**

✓முன்னுரை

✓கடவுள் வணக்கம்

✓ இறைவனின் திரு உலா

✓வசந்தவல்லியின் காதல்

✓குறவஞ்சி நாடகம்

✓சிங்கனும் சிங்கியும்

✓முடிவுரை

**கடவுள் வணக்கம் பகுதியில் குறிப்பிட்ட**

✓முன்னுரை

✓கைலான் காவலான்

✓ஆறுமுகன் தமிழ் தந்தான்

✓சிவன் கொழுந்தை வேண்டுவோம்

✓குலல் வாய் மொழியைக் கூறுவோம்

✓மூவர் வணக்கம்

✓தமிழ் உரைத்த முனியை பாடுவோம்;

வாதவூரான் அடிகளைப் பேணுவோம்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓ஞானக் கொடிதனை இயம்புவோம்

✓நூலின் பயன்

✓ அவையடக்கம்

✓முடிவுரை

**" இறைவனின் திரு உலா" பகுதியில் குறிப்பிடப்படும் செய்திகள்**

✓முன்னுரை

✓கட்டியங் காரன் வந்தான்

✓ஞாயிறு போல் மேவினாரே

✓பவனி வந்தனரே உலாக்காண வரும் பெண்கள்

✓ கன்னியரின் பேச்சு

✓ முடிவுரை

**"வசந்த வல்லியின் காதல்" அறியப்படும் செய்திகள்**

✓முன்னுரை

✓வசந்தவல்லி வந்தாள்

✓அவள் வரும் அழகு

✓வசந்த வல்லியின் அழகு

✓பந்தடி பயிறுகள்

✓பந்தாடிய சிறப்பு

✓பாடலின் சிறப்பு

✓விந்தை! விந்தை!

✓நாதனை எதிர் கண்டாள்

✓கண்டாள்! வியந்தாள்!

✓உருகினாள்! உருகினாள்

✓மயங்கி நின்றாள்

✓தோழியரின் புலம்பல்

✓தோழியரின் ஐயுறவு

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓ வெதுப்பினர்கள்

✓கொடும்பாவி நிலவே

✓நிலவைப் பழித்தல்

✓வேனிலானே!

✓மதனை பழித்தல்

✓பாங்கி வினாவுதல்

✓கோளாய்ப் பாங்கி

✓பாங்கி பழித்தல்

✓ஈகரை புகழ்தல்

✓ஒரு பெண் கண்டாய்

✓கருமம் ஏதோ

✓வருத்திக் கூறுதல்

✓உன் விருப்பம் போல்

✓தூது சொல்லி வாராய்

✓தக்க சமயம் கேளடி

✓நல்ல சமயமடி

✓கூடல் இழைத்தல்

✓கூடாய் கூடலே

✓முடிவுரை

**குறவஞ்சி நாடகத்தில் அரங்கேற்றப்படும் செய்திகள்:**

✓முன்னுரை

✓குறவஞ்சி வருகிறாள்

✓வஞ்சி வந்தல்

✓கொஞ்சி வருகிறாள்

✓குறவஞ்சி வந்தனளே

✓இடை பொறுக்காது

✓கொடி வந்தாள்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓மலைவளம் கேட்டாள்

✓எங்கள் மலையே

✓வசந்தவல்லி சொன்னது

✓நாட்டு வளம் கூறுதல்

✓நகர்வலம் உரைப்பேன்

✓நகர்வளம்

✓கிளை விசேடம் கேட்டன்

✓கிளை விசேடம் கூறுதல்

✓குறியின் தன்மை யாது?

✓குறியின் சிறப்புகள்

✓எனக்கு ஒரு குறி

✓குறி ஏற்பாடுகள்

✓மாப்பிள்ளை வருவான்

✓குறி சொல்ல வா

✓கைமலர் காட்டாய்

✓கவிஞர் பேசுகிறார்

✓கைகளின் சிறப்பு

✓மகராசி நீயே!

✓தெய்வ வணக்கங்கள்

✓சொல்லி போகிறேன்

✓சொல்லக் கேளாய்

✓காமக் காய்ச்சல் அடி

✓ஊரும் பெயரும் தாரும்

✓பெண் சேர வல்லவன்

✓சினம் கொள்

✓குறத்தியின் பதில்

✓சக்கத்தில் இடுக்குவாயோ?

✓முடிவுரை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**அலகு - 3**

**முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பருவம் தோறும் முதல் 5 பாடல்**

**குறிப்புகள்:**

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் நூல் பிள்ளைத்தமிழ் வகையைச் சேர்ந்த சிற்றிலக்கியம். அதன் ஆசிரியர் குமர குருபரர். நூலின் பாட்டுடைத்தலைவன் முருகன்; பாடப்பட்டுள்ள அவனது பருவங்கள் பத்து. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலில் உள்ள மொத்தப் பாடல்கள் 101. இந்த நூலைப் பாடுதற்கு முருகப் பெருமான் 'பொன்பூத்த குடுமி' என்று அடியெடுத்துக் கொடுத்ததாக இந்தப் பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

புள்ளிருக்கு வைத்தீசுவரன் கோயிலில் இருக்கும் முருகன் பெயர் முத்துக்குமாரசாமி.

**நூலில் உள்ள சிறப்புச் செய்திகள்**

- இந்த முருகனை இவர் 'தீராத வினை தீர்த்த தம்பிரான்' என்கிறார்.
- இங்குள்ள தீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம்.
- இதன் விபூதி குண்டத்தில் எழுந்த வெண்சாந்தை எடுத்து உண்பர்.
- சந்தான தீர்க்கத்திலிருந்து மண் எடுத்து உண்பர்.
- முத்துக்குமார சுவாமியைக் காக்கும்படி திருமாலை அழைக்கும்போது 'பச்சைப் பசுங்கொண்டலே' என அழைக்கிறார்.

**நூலில் உள்ள சில சிறந்த அடிகள்:**

- திருக்கோல முடன்ஒரு மணக்கோலம் ஆனவன் செங்கீரை ஆடி யருளே

செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை ஆடி யருளே.

குறப்பெண் ...

- தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் செங்கீரை ஆடி யருளே

ஆதி வைத்திய நாத புரிக் குகன் ஆடுக செங்கீரை

**ஆசிரியர் குறிப்பு :**

**பெயர்** – குமரகுருபரர்

**பெற்றோர்** – சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாமி சுந்தரியம்மை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**ஊர்** – திருவைகுண்டம்

**இயற்றிய நூல்கள்** – கந்தர்கலிவெண்பா, என மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம் முதலியன.

**சிறப்பு** – தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். திருப்பணந்தாளிலும், காசியிலும் தம்பெயரால் மேடம் நிறுவி உள்ளார்.

**இறப்பு** – காசியில் இறைவனடி சேர்ந்தார்.

**காலம்** – பதினேழாம் நூற்றாண்டு.

**நூல் குறிப்பு:**

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு பால்களிலும் பாடப்படுவதுண்டு. ... மூன்று மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரையான குழந்தையின் வாழ்க்கைக் காலத்தைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துக் காண்பர். ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாடல்கள் வீதம் அமைத்துப் பாடப்படுவது வழக்கு.

**பருவங்கள்**

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனும் பத்துப் பருவங்களையுடையது. *பெண்பாற் பிள்ளைத்தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்டு இறுதியிலுள்ள மூன்று பருவங்களுக்கு ஈடாகச் சிற்றில் இழைத்தல், சிறு சோறாக்கல், குழமகன், ஊசல், காமவேள்நோன்பு முதலியவற்றுள் எவையேனும் மூன்றைப் பெற்று வரும் ஆயினும் பெரும்பாலும் நீராடல் அல்லது கழங்கு, அம்மானை, ஊசல் எனும் பருவங்களே அதிகம் இடம் பெறுகின்றன. இதனை

**" சாற்றிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி**

**மாற்றாரிய முத்தமே வாரானை - போற்றாரிய**

**அம்புலியே யாய்த்த சிறுபறையே சிற்றிலே**

**பம்புசிறு தேரோடும் பத்து "**

**என்ற வெண்பாப் பாட்டியல் நூற்பாவாலும் (பாடல் 7) ,**

**"சிற்றில் இழைத்தல் சிறுசோறாக்கல்**

**பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்**

**ஆண்டு ஈறாறதில் இழிற்காமன் நோன்போடு**

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**வேண்டுதல் தானுள விளம்பினர் புலவர்"**

**என்ற பன்னிரு பாட்டியல் நூற்பாவாலும் (பாடல் 105)**

**" பின்னைய மூன்றும் பேதையர்க் காகா**

**ஆடுங் கழங்கு அம்மானை ஊசல்**

**பாடுங் கவியால் பகுத்து வகுப்புடன்**

**அகவல் விருத்தத் தாள் கிளையளவாம்" (பாடல்.47)**

என்றஇலக்கண விளக்கப் பாட்டியல் நூற்பாவாலும் அறியலாம். பிள்ளைத்தமிழ் பத்து பருவங்களில் தான் அமைய வேண்டும் என்பது வரையறை ஆகும். பெரும்பாலான பிள்ளைத்தமிழ் நூல்கள் இவ்வாறே பாடப்பட்டுள்ளன. ஆயினும் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் 11 பருவங்களையும், தில்லை சிவகாமியம்மைப் பிள்ளைத்தமிழ் பன்னிரண்டு பருவங்கள் கொண்டதாகவும் பாடப்பட்டுள்ளன.

**பருவங்கள் விளக்கம்**

தமிழர் பண்பாட்டில் முதல் 2 திங்கள் குழந்தையை வெளியில் கொண்டு வர மாட்டார்கள். எனவே, பிள்ளைத்தமிழ், 3-ஆம் திங்கள் முதல் பாமாலைகளால் தொடுக்கப்படும்.

3-ஆம் திங்கள்: காப்பு

5-ஆம் திங்கள்: செங்கீரை

7-ஆம் திங்கள்: தாலாட்டு

9-ஆம் திங்கள்: சப்பாணி

11-ஆம் திங்கள்: முத்தம்

13-ஆம் திங்கள்: வருகை

15-ஆம் திங்கள்: அம்புலி

17-ஆம் திங்கள்: சிற்றில் (ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது) / நீராடல் (பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது)

19-ஆம் திங்கள்: சிறுபறை (ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது) / அம்மானை (பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது)

21-ஆம் திங்கள்: சிறுதேர் (ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது) / ஊசல் (பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரியது)

**1. காப்புப்பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதல் பருவம் காப்புப்பருவம் ஆகும். பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிறக்கவும் பாட்டுடைத்தலைவன்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

மேன்மையடையவும் காப்பாற்றியருளும்படி இறைவனை வேண்டும் பருவம். பின் வரும் பருவங்களுக்கெல்லாம் இப்பருவமே முதல் நாடியாக அமைவதால் காப்பு இன்றியமையாத்தாகிறது. காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள திருமாலே காக்கும் பருவத்தில் முதற்கடவுளாகப் போற்றப்படுகிறார் இதனை

**" அவன்தான்**

**காதற்கிழவன் ஆகலானும்**

**பூவின் கிழத்தியைப் புணர்த லானும்**

**முடியும் கடகமும் மொய்பூந் தாரும்**

**குழையும் நூலும் குருமணப் பூணும்**

**அணியும் செம்மல் ஆகலானும்**

**முன்னுற மொழிதற்குரியன என்ப" ( பாடல். 24)**

எனப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடுகிறது. ஆயினும் இதனை விடுத்து வேறு கடவுளர்களையோ, அடியவர்களையோ காப்பாகக் கூறும் முறையும் உள்ளது.

**2. செங்கீரைப் பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் இரண்டாவது பருவம் செங்கீரைப் பருவமாகும். இது குழந்தையின் ஐந்தாம் திங்களில் நிகழ்வதாகும். "கீர் என்பதற்கு சொல் எனப் பொருள் கொண்டு இது குழந்தைகள் மழலையை விட இனிமையான பொருள் தெரியாத ஓசையை எழுப்பும் பருவம்" என்றும், "ஆடுக செங்கீரை எனப்பாடுவதால் குழந்தை ஒருகாலை உயர்த்தியுமொருகாலை மடக்கியும் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி முகத்தை மேலே உயர்த்தி ஆடுதலாகிய பருவம்" என்றும், "அவ்வாறு ஆடும் பொழுது சுற்றத்தார் சிறந்த சொற்களை மழலை கூற வேண்டும் என்று வேண்டிக் கொள்வர்" என்றும் கூறுவர். (காண்க கலைக்களஞ்சியம், தொகுதி 7 பக்கம்: 370)

குழந்தை தலையெடுத்து முகமசைத்தாடும் நிலையே பெரும்பாலான பிள்ளைத்தமிழ் நூல்களில் காணப்படுகிறது.

**3. தாலப்பருவம்**

பிள்ளைத்தமிழில் மூன்றாம் பருவம் தாலப்பருவம் ஆகும். இது குழந்தையின் ஏழாம் திங்களில் நிகழ்வது ஆகும். தால் என்பது நாக்கு. நாக்கை அசைத்து தாலாட்டி குழந்தைகளைத் தூங்க வைப்பது இப்பருவமாகும். பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் ஒரு பருவமாக விளங்கும்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

தாலாட்டு நாளடைவில் தனியொரு சிற்றிலக்கியமாக உருப்பெற்றது எனலாம்.

**4. சப்பாணிப் பருவம்**

சப்பாணிப்பருவம் குழந்தையின் ஒன்பதாம் திங்களில் நிகழ்வதாகும். ஒன்பதாவது மாதத்தில் குழந்தை உட்காரத் தொடங்கிய பிறகு மகிழ்ச்சியால் கை கொட்டுதல், கையாட்டுதல் போன்ற விளையாட்டுகள் அதனிடம் இயல்பாகத் தோன்றும். பெற்றோரும் மற்றோரும் கைதட்டிக் காட்டி குழந்தையை அழைப்பதோடு குழந்தையையும் கைத்தட்டும்படி வேண்டுவர். குழந்தை அதற்கேற்ப " சப்" என்ற ஒலி உண்டாகும்படி "பாணி" யைக் (கையை) கொட்டி முழக்கும். இதுவே சப்பாணிப் பருவம் ஆகும்.

குழந்தை நிமிர்ந்து அமர்ந்திருக்கும் அமைப்பை 'சப்பாணி' என்று கூறும் வழக்கம் உண்டு. அதனால் இப்பருவம் சப்பாணி என்றும், 'சக + பாணி= சப்பாணி' (சக=உடன், பாணி=கை ) இரண்டு கைகளையும் உடன் சேர்த்துக் கொட்டுதலால் சப்பாணியாயிற்று என்றும், ' சப' என்றால் சேர்த்தல் எனப் பொருள் கொண்டு, கைகளைச் சேர்த்து ஒலி எழுப்புதல் என்றும் பொருள் கொள்வர்.

**5. முத்தப்பருவம்**

பிள்ளைத்தமிழின் ஐந்தாவது பருவம் முத்தப் பருவம் ஆகும். குழந்தையின் பதினோராம் திங்களில் நிகழ்வது இப்பருவம் ஆகும். பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் முத்தப்பருவம் சிறந்த பருவமாகக் கருதப்படுகிறது. குழந்தையைப் பாராட்டி மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, அதன் மலரினும் மெல்லிய இதழ்களால் முத்தம் பெற்று மகிழ்தலே முத்தப் பருவம் ஆகும்.பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாக்கி அதன் முத்தத்திற்கு ஏங்கும் கவிஞர்களின் நிலையினை எல்லாப் பிள்ளைத்தமிழ் நூல்களிலும் காணலாம்.அப்போது பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள் பலவாறு புகழப்படும்.

**6. வருகைப்பருவம்**

ஆறாவது பருவமாகிய வருகைப் பருவம் குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வதாகும். இதனை வாரானைப் பருவம் என்றும் போற்றுவர். வரவேற்றல் என்பது தமிழர் பண்பாட்டில் தலை சிறந்த ஒன்றாகும். இப்பான்மையில் தோன்றியதே வருகைப் பருவமாகும். தத்தித் தத்தி தளர்நடை இட்டு வரும் குழந்தையை அருகில் வருக! வருக! என வாய் குளிர மெய்மகிழ அழைக்கும் பருவமே வாரானைப் பருவம் ஆகும். குழந்தையை அவ்வாறு வரவேற்கும் பொழுது அதன் சிறப்புகளையெல்லாம் எடுத்துச் சொல்வர்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

பெ. சரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்மங்கலம் - கரூர்.

**7. அம்புலிப்பருவம்**

அம்புலி என்பது சந்திரனைக் குறிக்கும். விண்ணில் விளங்கும் சந்திரனை விளையாட வருமாறு அழைக்கும் பருவமே அம்புலிப் பருவமாகும்.பிள்ளையின் பதினைந்தாம் திங்களில் இது நிகழும். நடக்கக் கற்றுக் கொண்ட குழந்தை அங்குமிங்கும் சென்று காட்சிகளைக் காண மிகுதியாக விரும்பும். 'பிள்ளைக்கலிக்குஅம்புலியாம்' என்பதன் மூலம் இப்பருவத்தின் சிறப்பை உணரலாம். வெண்ணிலவை குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பொழுது

குழந்தையுடன் சரி நிகராக அம்புலியை எண்ணுதல்

அம்புலியும் குழந்தையும் வேறுபடுதல்

விளையாட வருவதனால் ஏற்படும் நலன்களைக் கூறுதல்

வருந்தி அழைத்தும் வரவில்லையாயின் இன்ன தண்டனை பெறுவாய் என்று கூறுதல்

எனச் சாம பேத தான தண்ட முறையில் அமைவது இப்பருவமாகும்.அவ்வாறு அழைக்கும் பொழுது சிலேடை முதலிய அணி இலக்கணங்கள் அழகுற அமைவதாகும்

**ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரியன**

**8. சிற்றில் இழைத்தல் / சிற்றில் சிதைத்தல்**

ஓடியாடி சுற்றித்திரிந்து விளையாடும் குழந்தையின் பதினேழாம் திங்களில் இப்பருவம் பாடப்படுவதாகும். இதன் முந்தைய பருவத்தில் அம்புலியை விளையாட அழைத்து அது வாராத போது கோபம் கொண்ட குழந்தை பெண்குழந்தைகள் கட்டிய சிற்றிலை சிதைக்கிறது. அப்போது அதனைக் கட்டிய பெண்மக்கள் எல்லாம் எம் சிற்றிலைச் சிதைக்க வேண்டாம்! என வேண்டுமுகமாகப் பாடப் படுவதே இப்பருவமாகும். மற்ற பருவங்கள் எல்லாம் பெற்றோரும் மற்றொரும் பாடுவதாக அமைய இப்பருவம் மட்டும் சிறுமிகள் பாடுவதாக அமையும்.

**9. சிறுபறை முழக்கல்**

ஆண்பாற் பிள்ளைத்தமிழின் ஒன்பதாவது பருவம் சிறு பறை முழக்கல் ஆகும். இது குழந்தையின் பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வதாகும். இப்பருவத்தில் ஒலி இன்பங்கள் குழந்தையை மிகவும் ஈர்க்கும். ஆதலால் குழந்தை சிறு பறை முதலியவற்றைக் கொட்டிக்கொண்டு விளையாடும். அவ்வாறான கருவிகளைக் கொடுத்து ஒலி முழக்குமாறு செய்து மகிழ்விப்பதே இப்பருவமாகும்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

### 10 சிறு தேர்ப்பருவம்

ஆண்பால் பிள்ளைத்தமிழின் பத்தாவது பருவம் சிறுதேர்ப் பருவமாகும். இது 21-ம் திங்களில் நிகழ்வதாகும். மரத்தாலான சிறிய தேரினை உருட்டி மகிழும்படி குழந்தையை வேண்டிப்பாடுவது இப்பருவமாகும். மட நடை பயிலும் பருவத்தில் உள்ள குழந்தைகளின் நடைப் பயிற்சிக்கு உதவும் பொருட்டு சிறு தேரினை ஓட்டி மகிழச் செய்வர். குழந்தை வளர வளர நடந்து செல்லுதல் மட்டுமின்றி தேர் முதலிய வற்றின்மீது ஊர்ந்து செல்லுதலையும் விரும்பும் இவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு தேர் முதலியவற்றினை உருட்டி குழந்தையை அமரச் செய்து மகிழ்வூட்டுவர். இது குழந்தையின் இருபத்தோராம் திங்களில் நிகழும் என்பது பொது இலக்கணம் ஆகும். ஆனால் 'இலக்கண விளக்கப்பட்டியல்' இப்பருவம் குழந்தையின் ஏழாம் ஆண்டில் நிகழும் எனக் கூறுகிறது.

### பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரியன.

காப்பு முதலாக அம்புலி ஈறாக சொல்லப்பட்ட பருவங்கள் ஏழும் ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானதாகும். நீராடல், அம்மானை, ஊசல் ஆகியன பெண்பால் பிள்ளைத்தமிழுக்கே உரியனவாகும்.

### 8. நீராடல்

இது பெண்பால் பிள்ளைத்தமிழின் எட்டாவது பருவமாகும்.குழந்தையின் பதினேழாம் திங்களில் நிகழ்வது இப்பருவமாகும்.குழந்தையை நீர் நிலைகளில் நீராட வேண்டிப் பாடும் பருவமாகும்

### 9. அம்மானை

அம்மானை பெண்பாற்பிள்ளைத்தமிழின் ஒன்பதாவது பருவமாகும். கழங்கு என்றும் இதனைக் கூறுவர்.கழங்கு என்பது மரம் அல்லது ஈயம் போன்ற பொருள்களால் பந்து போன்று உருண்டையாகச் செய்து அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக மேலே எரிந்து கையால் பிடித்து விளையாடும் விளையாட்டு ஆகும். கழங்குக் காய்கள் கொண்டு ஆடுவர் என்றும் கூறப்படுகிறது. பேதை அல்லது பெதும்பைப் பருவ மகளிர் அம்மானை ஆடுவர் என்று உலா நூல்களில் குறிப்பிடப்படுகிறது. அம்மானை கலம்பகம் என்ற சிற்றிலக்கிய உறுப்புகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.

மகளிர் மூவர் கூடி தம் தலைவனைக் குறித்து மூவரில் ஒருத்தி வினா எழுப்ப, மற்றொருத்தி அதற்கு விளக்கம் சொல்ல, வேறொருத்தி இவ்விருவருக்கும் விடை கூறி அம்மானைக் காய்களை எறிந்து ஆடி மகிழ்வர். இவ்வாறு அமையும் பாடலின் இறுதிச் சீரில் அம்மானை என்ற சொல் அமையும். அம்மானை என்பது ஒரு வகை மகளிர் விளையாட்டு என்ற நிலை மாறி கதை அமைப்பை இசையோடு கூறும் இலக்கியம் என்ற நிலை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

தோன்றியது. இவ் அம்மானைப் பாடல்கள் தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களாகவே இருந்திருத்தல் வேண்டும் என்றும் கூறுவர்.

**10. ஊசல்**

பெண்பால் பிள்ளைத்தமிழின் பத்தாவது பருவம் ஊசலாகும். ஊசல் என்பது ஊஞ்சல் ஆடலாகும். குழந்தையை ஊஞ்சலாடி மகிழும்படி வேண்டும் பருவமே ஊசல் பருவமாகும். குழந்தையை ஊஞ்சலில் அமர்த்தி தாதியர் முதலானோர் அக்குழந்தையின் சிறப்புகளையெல்லாம் எடுத்துரைத்து ஊஞ்சலை ஆட்டி குழந்தையை மகிழ்விப்பர். ஊஞ்சல் அமைக்கும் வகை, ஆடும் வகை, குழந்தையின் சிறப்பு, காண்போருக்கு விளையும் கருத்து ஆகியவை இப்பருவத்தில் இடம் பெறும்.

## அலகு - 4

## கலிங்கத்துப்பரணி

### காடு பாடியது, தேதி பாடியது*

**குறிப்புகள்:**

கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும்.

குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. அனந்தவர்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமாயிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112-ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே நூற்பொருள்.

இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தீபங்குடியைச் சேர்ந்த அருகர் ஆவார். இந்நூலின் காப்புச் செய்யுளால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறியலாம்.

**பெயர் முறை**

பரணி நூல்களுக்குத் தோற்றவர் பெயரிலேயே தலைப்புத் தரும் வழமைக்கு ஏற்ப தோல்வியடைந்த கலிங்கத்தின் பெயரை வைத்து, இந்த நூல் "கலிங்கத்துப் பரணி" என அழைக்கப்படுவதாயிற்று.

தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி நூல் கலிங்கத்துப் பரணியே ஆகும். இதுவே பிற்காலப் பரணி நூல்களுக்கு வழிகாட்டியாய் அமைந்த

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

நூலாகும். இது கலித் தாழிசையாற் பாடப்பெற்றது. 599 தாழிசைகளை உடையது. காலம் (1078- 1118-குலோத்துங்க சோழன் காலம்) பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி. சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

### பரணி

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி

(அமர் - போர்; மானவன் - படைவீரன்.)

பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாடும் சிற்றிலக்கிய வகை ஆகும். போரிலிருந்து மீண்ட தலைமகன் பால் புலவியுற்ற தலைமகளது ஊடலைத் தீர்க்க புலவர்கள் வாயிலாவதும், புலவியாற்றிய பின்னர், தலைவன் சென்ற காட்டின் கொடுமையையும் தலைவனின் வீரத்தையும், அக்காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுவதையும், காளி பேய்களுக்கு உரைப்பதையும் எடுத்துச் சொல்லும் வடிவுடன் பரணி நூலானது அமையும்.

பரணி நாளில் பேய்கள் கூடி நிணச்சோறு( இரத்தமும் இறைச்சியும் கலந்த உணவு) அட்டு ( சமைத்து) உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடிக் களித்துப் போரில் வென்ற மன்னரைப் புகழும் புகழ்ச்சியைக் கூறுவது. காளிக்குக் கூளிகள் கூறுவதாக அமைவது.

### நூலாசிரியர்

கவிகள் என்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவிகளைச் சொல்பவர்கள் ஆவார்கள். அத்தகையவருகளுள் செயங்கொண்டார் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர். இவர் முதற்குலோத்துங்க சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். குலோத்துங்க சோழனுடைய புகழையும் அவனின் தலைமைப் படைத்தலைவனான கருணாகரத்தொண்டைமானின் சிறப்பையும் கலிங்கத்துப் பரணி என்னும் நூலைப் பாடி நிலை நிறுத்தியவர்.

- இவருடைய ஊர், இயற்பெயர், பிறப்பு, வளர்ப்பு இதுவரைத் தெளிவாகத் தெரியவில்லை.
- தீபங்குடிப்பத்து என்னும் நூலில் உள்ள மூன்றாவது பாடலிலும், தமிழ் நாவலர் சரிதையின் 117-ஆவது பாடலலும் இவருடைய ஊர் தீபங்குடி அறியமுடிகிறது. இவர் எந்தத் தீபங்குடி என்பதில் கூற முடியவில்லை.
- இருப்பினும் சோழநாட்டில் கொராடாச் சேரிக்கு அருகில் உள்ள தீபங்குடி என்பதாகும். இவருடைய காலம் 11-ஆம் நூற்றாண்டின் இறுதியாகவோ 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகவோ இருக்கலாம்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

- இவரைப் பிற்கால புலவரான பலபட்டடைச்சொக்கநாதர், பரணிக்கோர் செயங்கொண்டார் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இவர் கலிங்கத்துப்பரணி தவிர புகார் நகர வணிகர் பெருமக்களைச் சிறப்பித்து இசையாயிரம் என்ற நூலைப் பாடியுள்ளார். உலா மடல் என்ற பிறிதொரு நூலும் விழுப்பரையர் என்ற தலைவர் மீது பாடியுள்ளார்.

**நூலின் அமைப்பு முறை**

கலிங்கத்துப்பரணியின் நூலமைப்பில் பின் வரும் பொருள்கள் விளக்கப்படுகின்றன.

**கடவுள் வாழ்த்து**

போர்த்தலைவனாகிய குலோத்துங்கன் நெடிது நின்று ஆட்சி செய்ய வேண்டுமெனக் கடவுளைத் துதித்துப் பாடப்படுகிறது.

**கடை திறப்பு**

கலிங்கத்தின் மேல் படையெடுத்துச் சென்ற வீரர்கள் வருவதற்குக் கால தாமதம் ஆனதால் அதனைக் கண்டு மகளிர் ஊடல் கொண்டு கதவை அடைத்ததாகவும், அப்பெண்கள் மகிழுமாறும் ஊடல் நீங்கிக் கதவைத் திறக்குமாறும் செய்ய, தாம் வெற்றி பெற்ற கலிங்கப்போர் பற்றிக் கூறுவது போலவும் அமைந்தது.

**காடு பாடியது**

கலிங்கப் போர்க்களத்தில் நிணக்கூழ் சமைத்த பேய்களின் தலைவியாகிய காளி உறையும் இடமாகிய பாலையைச் சார்ந்த காட்டைப் பற்றிக் கூறுவது. இதில் பாலை நில வெம்மையின் கொடுமை சுவையுடன் கூறப்பட்டுள்ளது.

**கோயில் பாடியது**

காளி உறையும் இடமாகிய காட்டில் நடுவண் அமைந்துள்ள காளிக் கோயிலைப் பற்றிக் கூறுவது. இதில் காளிக் கோயிலின் அடிப்படை(அடிவாரம், அஸ்திவாரம்) அமைத்தது, சுவர் அடுக்கியது, தூண் நிறுத்தியது முதலான செய்திகளைக் கூறுகிறது. குலோத்துங்கன் பல போர்க் களங்களில் பெற்ற வெற்றிச் சிறப்புகள் காட்டில் காணப்படும் பல வகைக் காட்சிகளோடு தொடர்புப் படுத்திக் கூறப்படுகிறது.

**தேவியைப் பாடியது**

காளிக் கோயிலைப் பற்றிக் கூறியபின் காளியைப் பற்றிக் கூறுவது. காளியின் உறுப்புகள் பற்றியும், குலோத்துங்க சோழனின் புகழும் இடைஇடையே கூறப்படுகிறது.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**பேய்ப்பாடியது**

காளியைச் சூழ்ந்திருக்கும் பேய்களின் இயல்புகள் கூறப்படுகிறது. பேய்களின் உறுப்பு நலங்கள் பற்றி நகைச் சுவையோடு விளக்கப்படுகிறது. சில பேய்களின் உறுப்பு நலங்கள் குறைந்து காணப்படுவதாகவும் , குலோத்துங்கனின் பல போர்க்கள வெற்றிகள் குறித்தும் கூறப்படுகிறது.

**இந்திரசாலம்**

பேய்கள் சூழ காளி அரசு வீற்றிருந்த அமயத்தே ( அவையில்) இமயத்திலிருந்து வந்த முது பேய் ஒன்று தான் கற்று வந்த இந்திர சாலங்களை(மாய வித்தைகள்)க் காட்டுவதாக நகைச்சுவையுடன் கூறப்படுகிறது.

**இராச பாரம்பரியம்**

குலோத்துங்கனின் குடியின் வரலாறு கூறப்படுகிறது. கரிகால் சோழன் தொடங்கிச் சோழ வரலாறு கூறப்படுகிறது

**பேய் முறைப்பாடு**

பரணிப்போர் நிகழ்வதற்கான முற்குறிகளைப் பேய்கள் கண்டதாகக் கூறுவது இப்பகுதி. பேய்களின் பசிக்கொடுமை, அப்பேய்களுக்கு ஏற்படும் சில நல்ல குறிகள், இமயத்தில் இருந்து பேய் தான் வந்த வழியில் கலிங்கத்தில் கண்ட தீக்குறிகள், இவைகளைக் கேட்டு கணிதப்பேய் கனவும் நனவும் கண்டு, குலோத்துங்கனால் பரணிப்போர் உண்டு எனக் கூறுவதும், பின்னர் நிகழப்போவதை முன்னறிவிப்பாகக் கூறும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

**அவதாரம்**

கலிங்கப்போர்த் தலைவனான குலோத்துங்கன் சிறப்பைக் காளி பேய்களுக்குக் கூறுவது போல் அமைக்கப்பட்ட இப்பகுதியில் குலோத்துங்க சோழனின் பிறப்பு, வளர்ப்பு, இளவரசுப்பட்டம், முடி சூடியது முதலிய செய்திகள் விளக்கப்படுகிறது. சாளுக்கிய குலத்தில் பிறந்து தாய்க் குலமாம் சோழ குலத்து அரசுரிமை பெற்றது , இளவரசராய் இருந்த போது வட திசை நோக்கிப் போருக்கு எழுந்தது, சோழன் இறந்த சமயத்தில் சோழ நாட்டை நிலைபெறுத்தி முடிசூடியது , பெரு மன்னனாய்ச் சிறப்புற ஆட்சி செய்தது, பாலாற்றங்கரைக்கு நால்வகைப் படையுடனும், தேவியருடனும், சிற்றரசர்கள் சூழவும் புறப்பட்ட சிறப்பு, தில்லையிலும், அதிகையிலும் தங்கிச் சென்று காஞ்சியை அடைந்தது ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**காளிக்குக் கூளி கூறியது**

காஞ்சியை அடைந்த குலோத்துங்கன் ஒரு சித்திரப் பந்தர் கீழ் அமைச்சர் முதலியோருடன் வீற்றிருந்த சிறப்பும் சிற்றாரசர்கள் பலரும் வந்து திறை செலுத்தியதும், திறை செலுத்தாத கலிங்க மன்னன் மேல் குலோத்துங்கனின் ஆணைப்படி கருணாகரத் தொண்டமான் நால்வகைப்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

படையுடன் போருக்கெழுந்த இயல்பும் கூறப்படுகிறது. பல ஆறுகளைக் கடந்து கலிங்கம் அடைந்ததும், கலிங்கத்தை எரிகொளுவி அழித்ததும், அது கண்ட கலிங்கமக்கள் அரசனிடம் முறையிட்டதும் , அவன் வெகுண்டெழுந்ததும், அமைச்சர் முதலானோர் அவனுக்கு அறவுரைப் பகர்ந்ததும், அதனை மதியாமல் கலிங்க மன்னன் போருக்குச் சென்றதுமான செய்திகள் விளக்கப்படுகிறது.

**போர் பாடியது**

கலிங்கப்பேய் காளிக்குப் போரின் இயல்பைக் கூறுவதாக அமைந்தது. நால்வகைப் படையின் செயல்கள், தீவிரமான போர்முறை , கருணாகரன் தன் களிற்றை உந்தியதும் இரு பக்கப் படைகளும் ஒருவரை ஒருவர் பொருத செய்திகளும், இரு திறத்திலும் நால்வகைப் படைகளும் பல அழிந்ததும், போரின் கடுமைத் தாங்காமல் கலிங்க மன்னன் ஓடி ஒளிந்ததும், அவனைப் பற்றிக் கொணர தன் படைகளோடு ஒற்றர்களையும் கருணாகரத்தொண்டைமான் அனுப்பிய செய்தியும், கலிங்க வீரர்கள் ஒரு மலை உச்சியில் மறைந்து நிற்பதைப் பற்றி அறிந்ததும் அது மாலை வேளை ஆனதால் போரிடாமல், விடியும் வரை காத்துநின்று விடிந்த பின் கலிங்கரை அழித்ததும், கலிங்க வீரர்கள் உருக்குலைந்து நாற்புறமும் ஓடியதும், அங்குத் தன் கவர்ந்த செல்வங்களுடன் குலோத்துங்கன்பால் சென்று பணிந்து நின்றதுமான செய்திகள் அழகுபடக் கூறப்பட்டுள்ளன.

**களம் பாடியது**

போரைப் பற்றிச் சொல்லி முடித்த பேய் காளியைப் போர்க்களம் காணுமாறு அழைக்க காளி வந்து களத்தைக் கண்டு, அக்காட்சிகளைப் பேய்களுக்குக் காட்டுமாறு அமைந்துள்ளது. காட்சிகளைக் காட்டிய பின், நீராடி கூழட்டு உண்ணுமாறுபேய்களைப் பணிக்கிறாள் காளி. அங்கணமே பேய்கள் பல் துளக்கி, நீராடி கூழ் சமைத்து உண்ணும் இயல்பு கூறப்படுகிறது. பேய்கள் பாடும் வள்ளைப் பாட்டில் குலோத்துங்கனின் புகழ் பாடப்படுகிறது. முடிவில் பேய்கள் தங்களுக்குப் பரணிக் கூழ் அளித்த குலோத்துங்கனை வாழ்த்துவதாகக் கலிங்கத்துப் பரணி முடிகிறது.

**அரசர் இயல்புகளும் அக்காலப் போர் முறைகளும்**

இந்நூலில் அக்கால அரசர் இயல்புகளும் அக்காலப் போர் முறைகளும் சமுதாய நிலைகளும் கூறப்பட்டுள்ளன.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**படைக்கலப் பயிற்சி**

அக்கால அரசர்கள் தினந்தோறும் படைக்கலப் பயிற்சி பெற்றனர். அவ்வாறு பயிற்சி முடிந்த பின் தம் அரையிலே (இடையில்) உள்ள உறையில் அதனைப் பூணும் வழக்கம் இருந்தது.

**அரசவை**

அரசு வீற்றிருக்கும் போது அரசனின் தேவியரும் உடன் இருத்தல் வழக்கம்.

அரசனுக்குச் சேவையாற்ற 'அணுக்கிமார்' எனப்படுவோர் இருந்தனர். இவர்கள் நாடகம், நிருத்தம் முதலியவற்றாலும், பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி எனும் நால்வகைப் பண்ணிலும் வல்லவர்களாய் ஆடல் பாடல்களில் சிறந்திருந்தனர். இவர்களும். யாழ், குழல், மத்தளம் முதலிய இசைக்கருவி வல்லார் பலரும் அரசவையில் ஒரு பக்கத்தே இருப்பர்.

அரசன் புகழ் பாடுவோராகிய சூதர், மகதர், மங்கலப் பாடகர், வந்தியர், வைதளிகர் என்போரும் அரசவையில் இருந்தனர்.

அரசனுக்குப் பிறர் விருப்பத்தை அறிவித்தும், அரசன் கட்டளையைப் பிறர்க்கு அறிவித்தும் ஒழுகுவோன் 'திருமந்திர ஓலையான்' எனப் பெயர் பெற்று அரசவையில் காணப்படுவான்.

**பயணம்**

அரசன் நால்வகைச் சேனைகளோடும் ஒன்று குறித்துப் பயணப்படுங்கால் மறையோருக்குக் கொடை முதலிய தருமங்கள் செய்வான். அச்சமயம் கவிவாணர்களுக்குப் பரிசுகள் அளித்துப் புறப்படுவான்.

பேரரசர் புறப்படுங்கால் அரசர் வாழ்கவென ஜெயஒலி முழக்கமும், மறையவர் மறைமொழி ஓதுதலும் அக்கால வழக்கமாகும்.

பயணம் செய்வோர் யானையூர்ந்தும், தேரூர்ந்தும், சிவிகையூர்ந்தும் செல்வர். சங்கொலி மங்கல ஒலியாகக் கருதப்பட்டது. அரசர் புறப்படும்பொழுது சங்கொலியோடு பல்லியங்களும் முழங்கிச் செல்லும். யானை மீது முரசதிர்ந்து செல்லும்.

**அரசர்க்கு வழங்கப்படும் திறைப் பொருட்கள்**

பேரரசருக்குப் பிற மன்னர்கள் திறையாகப் பல பொருட்களையும் கொண்டு வந்து இடுவர். மணி மாலை, பொன்னணி, முடி, பொற்பெட்டி, முத்துமாலை, மணிகள் இழைத்த ஒற்றைச் சரடு, பதக்கம்,மணிக்குவியல், பொற்குவியல், மகரக் குழை முதலியனவும் வழங்கப்பட்டன.

திறைப்பொருளாக யானை,குதிரை,ஒட்டகம் முதலியனவும் வழங்கப்பட்டன.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

இத்திறைப்பொருட்களை எருதுகளின் மீது ஏற்றிக் கொண்டு வந்தனர்.

**பிறந்த நாள்**

அரசனுடைய பிறந்த நாளை மக்கள் சிறப்புடன் கொண்டாடினார்கள். அரசனும் மக்கள் மகிழ்ச்சி கொள்ளுமாறு பல செயல்களைச் செய்வான்.

அரசனின் பிறந்த நாள் 'வெள்ளணி நாள்' என்றும் 'நாண்மங்கலம்' என்றும் பெயர் பெறும். குலோத்துங்கன் ஆட்சியில் ஒருநாள் போல் எந்நாளும் மக்கள் மகிழ்ச்சி பெருக இருந்தனர்

**சிற்றரசர் இயல்புகள்**

பேரரசர் தம் கழலை அடைந்த சிற்றரசர்களுக்கு அஞ்சல் அளித்துத் தம் அடியினை அவர் முடி மீது வைத்து அருள் செய்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

பேரரசர் யானை மீது ஏறும் போதும் தம் அடிகளைச் சிற்றரசர் முடிமீது வைத்து ஏறும் வழக்கம் இருந்தது.

**அமைச்சர்கள்**

பேரரசர்களின் அமைச்சர்கள் சிற்றரசர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். மேலும் சிற்றரசர்கள் அமைச்சர்களிடம் பணிவுடன் ஒழுகி வந்தார்கள் என அறியலாகிறது.

## அலகு - 5

## அழகர் கிள்ளை விடு தூது

**குறிப்புகள் :**

உள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று தூது. அத்தூது வகை இலக்கியங்களுள் ஒன்று அழகர் கிள்ளை விடு தூது.

**நூல் வரலாறு**

திருமாலிருஞ்சோலை மலையில் கோயில் கொண்டிருக்கும் அழகரிடத்து பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் கிளியைத் தூது விடுவதாக அமைத்துப் பாடிய நூல் அழகர் கிள்ளை விடு தூது. காப்பு வெண்பா ஒன்றையும், 239 கண்ணிகளையும் கொண்ட நூல் இது. இந்நூலை இயற்றியவர் சொக்கநாதப் புலவர். இவர் மதுரை நகரைச் சார்ந்தவர். தந்தை பெயர் சொக்கலிங்கம் பிள்ளை. பலபட்டடைக் கணக்கு எழுதும் தொழில் செய்யும் மரபில் வந்ததால் இப்பெயர் பெற்றார்.

- ❖ மதுரை மும்மணிக்கோவை,
- ❖ யமக அந்தாதி,

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

- தென்றல் விடு தூது,
- கன்னிவாடி நரசிங்கர் மேல் பாடிய
- வளமடல்,
- தேவை உலா
- முதலியன இவர் இயற்றிய வேறு நூல்களாகும்.

**நூல் அமைப்பு**

- அழகர் மலைக்கு,
- திருமாலிருஞ்சோலை,
- இடபகிரி,
- தென்திருப்பதி,
- சஞ்சீவி பர்வதம்,
- பழமுதிர்சோலை

எனப் பல பெயர்கள் உண்டு. கிள்ளை விடு தூதில் அழகர் மலை சிறப்புகள், இறைவன் சிறப்புகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

- அழகர் மலைக் கடவுள் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் காதலை அவரிடம் கூறக் கிளியைத்தூது அனுப்புவதாக அமைகிறது நூல். நூலின் முதலில் கிளியின் பெருமைகள் சொல்லப்படுகின்றன.
- அடுத்துக் கோடைத் திருவிழாவில் அழகர் உலா வரும் அழகும், அப்பெருமானிடம் தலைவி தன் உள்ளம் இழந்த வரலாறும் சொல்லப்படுகின்றன.
- இறுதியாக அழகரிடம் தன் காதலைத் தெரிவித்து அவருடைய மாலை ஒன்றை வாங்கிவருமாறு கிளியிடம் கூறுவதாக நூல் அமைகிறது.
- சாமி கவிகாளருத்திரர் பாடிய பிள்ளைத்தமிழ், கவிகுஞ்சர பாரதியாரின் அழகர் குறவஞ்சி முதலிய சிற்றிலக்கியங்களிலும் இம்மலையைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

புராண இதிகாசச் செய்திகள், பழக்க வழக்கங்கள், அழகர் கோயில் பூசை வழிபாட்டு முறைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

- இந்த நூலின் மூலத்தை 1905-ஆம் ஆண்டு மு. வேணுகோபாலசாமி நாயுடு பதிப்பித்தார். இந்நூலைப் பழைய ஏட்டு சுவடிகளுடன் ஒப்பிட்டு அரிய குறிப்புரைகளுடன் உ. வே. சாமிநாதையர் 1937-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

**நூற்சிறப்புகள்**

இந்நூலில் பல்வேறு புராண இதிகாசச் செய்திகள், பழக்க வழக்கங்கள், அழகர் கோயில் பூசை வழிபாட்டு முறைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இந்த நூலின் மூலத்தை 1905-ஆம் ஆண்டு மு. வேணுகோபாலசாமி நாயுடு

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

பதிப்பித்தார். இந்நூலைப் பழைய ஏட்டு சுவடிகளுடன் ஒப்பிட்டு அரிய குறிப்புரைகளுடன் உ. வே. சாமிநாதையர் 1937-ஆம்

**தூது இலக்கியம்**

தூது என்ற சிற்றிலக்கிய வகையைப் பற்றிய பொதுக் கருத்துகளையும் தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும், தூது இலக்கியத்தின் தோற்றத்தையும் இங்குக் காண்போம்

**தூது**

இருவரிடையே பேச்சு நிகழ்வதற்குச் செய்திகளை அல்லது கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு உறுதுணையாய் இருப்பவரைத் தூதர் என்று வழங்குவர். காதலர்களிடையே தூது அனுப்பும் பழக்கம் உண்டு. அரசர்களிடையே தூது அனுப்பும் மரபும் உண்டு. இன்றும் அரசுகளுக்கு இடையே கருத்துப் பரிமாற்றங்களுக்காகத் தூதர்கள் நியமிக்கப்படுகின்றனர். நாடுகள் தோறும் பிறநாட்டுத் தூதரகங்கள் உள்ளன. தொன்று தொட்டு நடைமுறையில் இருக்கும் தூது பற்றி இலக்கியங்களும் படைக்கப்பட்டன.

**அழகர் கிள்ளைவிடு தூதில் கூறப்படும் செய்திகள்:**

✓முன்னுரை

✓காப்புப் பாடல்

✓கிளியை விளித்தல் (அழைத்தல் )

✓அழகர் மாண்பு

✓பத்து உறுப்புகள்

1) மலை

2)ஆறு

3)நாடு

4)நகர்

5)தார் - மாலை

6) கரி- யானை

7) பரி - குதிரை

8) கொடி

9)முரசம்

10)ஆணை

✓கோடைத் திருவிழா

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

√தல்லாகுளம் வருதல்

√வைகை கரைத் திருக்கண்களில் வைகுதல்

√வண்டியூர் மண்டபம் வந்து தங்குதல்

√ஆதிசேட வாகனத்தில் பவனி வருதல்

√சோலைமலை அடைதல்

√தலைவி தன் நிலைமையை கூறுதல்

√தலைவி கிளிக்கு முகமனுறைதல் மொழிகள்

√வேறு பறவை தூது கூறா வென்றல்

√தத்தையே நீதான் தகுதி என்றல்

√இடமும் சமயமும் எடுத்துரைத்தல்

√மருமாலை வாங்கி என்று கூறல்

√முடிவுரை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்